A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89
மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்

PERSONAL
CLASSES
B. M. C FRONT LANE,
JAFFNA.

பங்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

PERSONAL
CLASSES
B. M. C. FRONT LANE
JAFFNA

A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

PHY: சந்தியசீலன்
CHE: மதுரமணி
BOT: சர்வானந்தா
ZOO: சவரதாசன்
PURE: } விஜயகுமார்
APP. }

சுடர்: 4 சுக்கில ஆடி மீ 31 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 12 (15 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 217

## மீள் குடியமர்வு நிவாரணம்: முதலாம் கட்டப் பணத்தை வழங்கி முடிக்க நடவடிக்கை

வங்கிகளில் தற்பொழுது திங்கள்; வெள்ளிக் கிழமைகளில் வழங்கப்பட்டு வரும் முதலாம் கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணப் பணத்தை துரிதகதியில் வழங்குவதற்கு வங்கி நிர்வாகங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன;

இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்குவதற்கு யாழ் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதன் காரணமாகவே வங்கிகளும் முதலாம் கட்ட நிவாரணத்தை வழங்கி முடிப்பதில் கூடிய அக்கறை எடுத்துள்ளன. (ஓ.10)

## யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஆய்வு கூட உபகரணங்கள்

### பிரிட்டிஷ் அதிகாரி வருகிறார்

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஆய்வுகூட உபகரணங்கள் வழங்குவது சம்பந்தமான ஒப்பந்தங்களைச் செய்யும் பொருட்டு பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் அடுத்த வாரம் இங்கு வரவுள்ளார்.

வன்செயல் சம்பவங்களின் போது சேதமடைந்த பல்கலைக்கழக ஆய்வுகூட உபகரணங்களை மீள வழங்குவதற்கு பிரிட்டிஷ் அரசு உறுதியளித்திருந்தது.

தற்சமயம் ஆய்வுகூட உபகரணங்கள் அங்கு கொள்வனவு செய்யப்படுவதாகவும், அடுத்த வாரம் இங்கு வரவிருக்கும் பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரி திரு. ஜோன் பெயினுடன் இதுசம்பந்தமாக ஒப்பந்தங்கள் செய்யப்பட இருப்பதாகவும், பெரும்பாலும் டிசம்பர் மாதத்தில் ஆய்வுகூட உபகரணங்கள் இங்கு வந்து சேரும் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [ஒ-3]

## பாடசாலைகள் நேற்று திறக்கப்பட்டிருந்தன

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 15

யாழ் மாவட்டத்தில் நேற்று பாடசாலைகள் திறக்கப்பட்ட போதிலும் பெரும்பாலான பாடசாலைகள் வெறிச்சோடியே காணப்பட்டன.

பாடசாலைகளுக்கு அதிபர்களும், ஆசிரியர்களும் கடமைக்கு வந்திருந்தனர்.

யாழ்- நகரத்தின் ஒரு சில பாடசாலைகளில்குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் வந்திருந்த போதிலும் அவர்களும் சில மணி நேரங்களில் வீடுகளுக்குத் திரும்பினர்.

இதேவேளை கிராமப் புறப் பாடசாலைகளிலும் மாணவர்கள் வரவு குறைவாகவேஇருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

# '87 நவம்பர் உடன்பாடு இரகசிய ஒப்பந்தமல்ல!

## பிரதியை பிரேமாவிடம் தாம் ஒப்படைத்ததாக ஜே. ஆர். தகவல்

கொழும்பு, ஆக. 15

மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து 1987 நவம்பர் 7ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடு இரகசியமானதல்ல.

'வெளியிடப்படாத நவம்பர் 1987 உடன்பாடு இலங்கை அரசாங்கத்திடமே இருந்து வந்திருக்கிறது. அதில் இரகசியம் எதுவுமே இல்லை. இது சம்பந்தமான சகல தஸ்தாவேஜூக்களையும் புதிய ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் ஒப்படைத்துவிட்டேன்"—இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருக்கிறார்.

நவம்பர் 1987இல் ராஜீவும் ஜெயவர்த்தனவும் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கை ஒன்று புதுடில்லிப் பேச்சுக்களின் போது இலங்கை அரசுக் குழுவிடம் 'திணிக்கப்பட்டது' என்று செய்தி வெளியானது தெரிந்ததே.

கடத்த வாரம் இலங்கை நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதத்தின் போதும் எதிர்க்கட்சி எம். பிக்களும் இந்தஇரகசிய உடன்படிக்கை பற்றிக் கேட்டனர்.

இப்போது திரு. ஜெயவர்த்தனவே அந்த "இரகசிய உடன்பாடு" பற்றிய இரகசியத்தை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையேயான சகல உடன்படிக்கைகளும் கடிதங்களும் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்று யு. என். ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. (உ-எ)

## பனம் பாணி பிஸ்கட்

பனம் பாணியில் இருந்து பிஸ்கட் தயாரிக்கப்பட இருக்கிறது.

பனை அபிவிருத்திச் சபை இது சம்பந்தமாக மேற்கொண்ட பரிட்சார்த்த முயற்சி வெற்றி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பனம் பாணி, ஒடியல் மா ஆகியவற்றுடன் மற்றும் சில பொருட்கள் சேர்க்கப்பட்டே பிஸ்கட் தயாரிக்கப்படும். (ஒ-3)

### புதுடில்லி யோசனைகள்:

## தமிழ்க்குழுக்களின் முடிவை பிரேமா எதிர்பார்க்கிறார்

புதுடில்லி யோசனைகள்பற்றி ஜனாதிபதி பிரேமதாஸா இன்னமும் முடிவு எடுக்காமலிருப்பதற்குக் காரணம் இந்த யோசனைகள்பற்றி தமிழ்க்குழு ஒன்றின் நிலை என்ன என்று தெரியாமல் இருப்பதுதான் என்று 'இந்து' நாளிதழ் கருத்து வெளியிட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக தமிழ்க் குழுக்களின் முடிவை ஜனாதிபதி எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள உத்தேச சமாதானக் கமிட்டியில் முக்கிய தமிழ்க்குழு ஒன்று இடம்பெறவேண்டும் என்பதுதான் புதுடில்லி யோசனைகளில் முக்கிய அம்சமாக உள்ளது.

இது குறித்து இக் குழுவை சம்மதிக்க வைப்பது இலங்கை அரசின் பொறுப்பாக இந்தியா விட்டிருக்கிறது.

இக் குழுவுடன் ஆலோசனை நடத்துவதற்காக உயர்கல்வி அமைச்சர் ஜனாப். சாகுல் ஹமீத் லண்டன் செல்லவிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## அமைச்சர்கள் அறிக்கை விடுக்கவும் கட்டுப்பாடு

கொழும்பு ஆகஸ்ட் 15

பாதுகாப்புப் படையினர் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி பாதுகாப்பு அமைச்சரின் அனுமதி பெறாமல் சக அமைச்சர்கள் அறிக்கை வெளியிட முடியாது.

இதற்கு முரணாக நடக்கும் அமைச்சர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாண் விலை, பஸ் கட்டணம் சில தினங்களில் உயரும்?

கொழும்பு, ஆக. 15

பாணின் விலையும். பஸ் கட்டணமும் இன்னும் சில தினங்களில் உயர்த்தப்படக்கூடும் என அறிய வருகிறது.

வருகிற 21ஆம் திகதிக்கு முன் இவற்றை அரசாங்கம் அறிவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவலறிந்த பொருளாதார நிபுணர்கள் கொழும்பில் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கைக்கு கடனுதவி மற்றும் நிதிச் சலுகைகளை வழங்குவதுபற்றி இறுதி முடிவு எடுப்பதற்காக உலக வங்கி, மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் தூதுக் குழுக்கள் மூன்றுவது தடவையாக வருகிற 21ஆம் திகதி கொழும்பு வந்து சேர்வர்.

அதற்கு முன்னரே இந்த விலை அதிகரிப்புக்களை அரசு அறிவித்துவிடும் என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

இக் குழுக்கள் கடந்த மே, ஜூலை மாதங்களில் கொழும்பு வந்து பேச்சுக்கள் நடத்திவிட்டுத் திரும்பின. ஆனால் இலங்கைக்கு உதவுவது பற்றி அப்போது குழுக்கள் முடிவு செய்யவில்லை.

மானியங்களை வழங்குவதன் மூலமும் பாண் விலையை அதிகரிக்காமலும் பஸ் கட்டணத்தை உயர்த்தாமலும் செயற்கைக் குறைப்பை' அரசு செய்துள்ளதாக சர்வதேச நிதி உதவி ஸ்தாபனங்கள் கருதுகின்றன. அந்த அபிப்பிராயத்தை நீக்கி கடனுதவியை பெற முயற்சிப்பது என்ற அடிப்படையில்தான் உத்தேச அதிகரிப்புகளை அரசு மேற்கொள்ள உள்ளதாம். (ஓ-எ)

### சுபநேரம்

[15 - 8 - 1989]

ஆடி 31 — செவ்வாய்க்கிழமை நக்ஷத்திரம்: உத்தராடம் சுபநேரம்:

10-35 முதல் 12-05 வரை

ராகுகாலம்:

03-05 முதல் 04-35 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## யாழ். பாடசாலைகளை சுமுகமாக நடத்துவது பற்றி வெள்ளியன்று மாநாடு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகளைச் சுமுகமான முறையில் நடத்துவதுகுறித்து ஆராய்வதற்காக, மாவட்ட மட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்கங்களின் மாநாடு ஒன்று எதிர்வரும் வெள்ளிக் கிழமை நடைபெற உள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளைச் சுமுகமான முறையில் நடத்துவது பற்றிய கூட்டம் ஒன்று நேற்றுக் காலை யாழ் கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்டக் கோட்டக் கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சகல பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் வெள்ளிக் கிழமை பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா பின்னணியில்...!

இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பணியில் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் பின்னணியில் இருந்து செயல்படுவதாக பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது. (ஒ-எ)

## வல்வையில் படையினர் சுற்றிவளைப்பு

வல்வெட்டித்துறை, ஆக.15

வல்வெட்டித்துறை பகுதியை நேற்று பெரும் எண்ணிக்கையான படையினர் சுற்றிவளைத்தனர்: வானில் ஹெலிகொப்டர்கள் சுற்றியபடி இருந்தன. தீவிர ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனால் பதற்றம் அடைந்த மக்கள் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

தீருவில் பகுதியில் சிலரின் வீட்டுக் கதவுகள் உடைக்கப்பட்டும் தேடுதல் நடத்தப்பட்டதாக பிரஜைகள் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதனிடையில் சில முக்கிய பிரமுகர்கள் வந்ததாலேயே பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

வல்லையிலும் வாகனங்களில் சோதனை நடத்தப்பட்டது. பயணிகளும் சோதனையிடப்பட்டார்கள்.

மண்டானில் இருந்து தொண்டமானாறுக்கு இராணுவ உயர் அதிகாரிகள் சென்றனர். (ஒ-160-94)

## ஈ. ஜ. மு வின் மறுப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 15

வெகுஜன தொடர்பு சாதனங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தவறான பிரசாரங்கள் குறித்து ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்: அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த சில தினங்களாக இந்திய வெகுசன தொடர்பு சாதனங்களில் குறிப்பாக தொலைக்காட்சி தமிழ் ஒளிபரப்புகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்டுவரும் தவறான பிரச்சாரம் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அண்மையில் வல்வெட்டித் துறையில் நடந்தேறிய அசம்பாவிதங்கள் தொடர்பாக எமக்கும் இந்திய அமைதிப் படை அதிகாரிகளுக்குமிடையில் நடந்த் பேச்சுவார்த்தை விபரங்கள் திரித்துக் கூறப்பட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பரீட்சை இல்லாமல் சான்றிதழ் வழங்கினால் தெற்கில் மரணதண்டனை!

கொழும்பு ஆகஸ்ட் 15

தென் இலங்கை பல்கலைக் கழகங்களில் பரீட்சை இன்றி சான்றிதழ் வழங்க கையொப்பம் இடுவோருக்கு மரணதண்டனை விதிக்கப்போவதாக அச்சுறுத்தப்பட்டுள்ளது.

தென் இலங்கை பல்கலைக் கழகங்களில் பரீட்சை நடத்த முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. அதனால் பரீட்சை இன்றியே சான்றிதழ் வழங்க உயர் கல்வி அமைச்சு முடிவு செய்து இருந்தது.

இப்படிச்சான்றிதழ் வழங்குவதற்குவதற்கு கையொப்பம் இடுபவருக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று தீவிர இயக்கம் ஒன்று அறிவித்துள்ளதாகத் தெரியவந்திருக்கிறது.

இதைத்தொடர்ந்துஅடுத்து மாணவர் நிலை குறித்து என்ன செய்யலாம் என்பது குறித்து அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் சொல்லப்பட்டது. (ஒ-3)

## மடுமாதா விண்ணேற்பு வைபவம்

குருநகர் ஆகஸ்ட் 15

வரலாற்று புகழ் வாய்ந்த மடுமாதா வருடாந்த விண்ணேற்பு வைபவம் மருதமடுத் திருப்பதியில் இன்றுவெகு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது.

இன்று காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் 8.30 மணிக்கு மரியன்னை திருச்சொரூப ஊர்வலமும் நடைபெறும்.

காலை 9-30, மணிக்கு நற்கருணை ஆராதனை - ஆசீர்வாதத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

(சிறப்பிதழ் 4 ஆம் பக்கத்தில்)

### முச்சந்தி முரளி



தென்பகுதியிலே வேலை நிறுத்தம் எண்டது சர்வ சாதாரணமாய் போயிட்டுது பாருங்கோ......!!

## தெற்கில் சம்பவங்கள் பெண் பொலீஸும் பலி!

கொழும்பு. ஆக 15

தென்பகுதியில் வார இறுதியிலும் நேற்றுமாக 72பேர் கொல்லப்பட்டனர்.

உடவளவ பகுதியில் 14பேர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர்,

லக்கல பகுதியில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

தென்பகுதியில்இடம்பெற்ற ஏனைய சம்பவங்கள் வருமாறு:—

★ ரன்கல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பெண் கான்ஸ்டபிள் ஒருவர் அவரது

(6-ஆம் பக்கம் பார்க்க)

## இன்று வேலைநிறுத்தத்திற்கு தென்பகுதியில் அழைப்பு

கொழும்பு, ஆக. 15

தென்பகுதியில் இன்று பொது வேலை நிறுத்தம் செய்யும்படி ஜே. வி. பி. இயக்கம் மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

இன்று இந்தியாவின் 43 ஆவது சுதந்திர தினம்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே இந்த வேலை நிறுத்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## விஞ்ஞான மாணி பட்டதாரிகளாக 111 மாணவர்

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நடத்திய விஞ்ஞான மாணி இறுதிப் பரீட்சை (1988) முடிவுகள் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

மொத்தம் 111 மாணவர்கள் விஞ்ஞான மாணிகளாகத்

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு

அரியாலைப் பகுதியில் சகல வசதிகளும் உள்ளடங்கிய [நல்ல தண்ணீர் கிணறு உட்பட] வீடு வாடகைக்கு விடப்படும்; தொடர்பு:- லரயிஸ், 219, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [ஸ்ரீதரன் மரக்காலை முன்பாக] (1398)

### மணவாளன் தேவை

யாழ்ப்பாண இந்து நாடார் இன 30 வயது B.Sc ஆசிரியைக்கு ஒத்துவரக் கூடிய மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (1395)

யாழ்ப்பாண கத்தோலிக்க 29 வயது ஆசிரியைக்கு எஞ்சினியர், T A, எக்கவுண்டன்ற், பட்டதாரி மணமகன் தேவை; கத்தோலிக்கர் அல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (1394)

### மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்துவேளாள 34 வயதுடைய அரசாங்கத்தில் மத்தியதர உத்தியோகம் பார்க்கும் தாரம் இழந்தவருக்கு தகுந்த மணப்பெண் தேவை. C/o No: 83, உதயன். (11730)

### காணவில்லை

இறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த வெ. செல்லத்துரை என்பவருக்குச் சொந்தமான அடையாள அட்டை சுன்னாகம் சந்தையில் தவறவிடப்பட்டுள்ளது; கண்டெடுப்பவர்கள் சுன்னாகம் பாலன் ஸ்ரோசில் கொடுக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1393)

### தவறிவிட்டது

13-8-89 அன்று இலவாலை பஸ்ஸில் பாக் ஒன்றும் சுகந்தகலாவின் அடையாளஅட்டையும் தவறுதலாய் ஒரு அன்பரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1392)

### கல்வி

பாலர்ஆசிரியர் பயிற்சிநெறிக்குவிண்ணப்பங்கள்கோரப்படுகின்றன க. பொ. த. [சா/த] சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம்; சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புகள் நடைபெறும். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம்; பாலர் ஆசிரியர் சங்கம். மே/பா உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (1520)

### பொது அறிவுப் போட்டி

அன்பு கல்வி நிறுவனம் நடாத்தும் பொது அறிவுப் போட்டி -4 1989-08-16 புதன்கிழமை மு. ப. 10 மணிக்கு நடைபெறும். 3 பணப்பரிசில்கள் பிரவேசம் 10/- 1989-8-15 மு. ப. 11 மணிக்கு முன்பு பதிவு செய்க: உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (1519)

### றேனியோ

றேனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள: தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (சி-2359)

### விற்பனைக்கு

புத்தம் புதிய டயர்கள் பல அளவுகளிலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நோதர்ன் அயர்ன் எஞ்ஜினியர்ஸ் இல. 95, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (கன்னாதிட்டி காளி கோவிலுக்கு முன்பாக) (1511)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Cobb) இன புரொயிலர், குஞ்சுகள் (Dekalb) இன பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1388)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் 'சக்தி சரவண' (அரச அங்கீகாரம் பெற்றசோதிடமட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரைமாந்திரீகநிபுணரும்) 210கஸ்தூரியார் வீதி, (யாழ்/இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்; வியாழக்கிழமை விடுமுறை. (9348)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்களை வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3264)

### இலவச மண்வெட்டி

அன்பன் கமநல சேவைப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு இலவச மண்வெட்டி வழங்கப்படவுள்ளது; முதலில் முந்நூற்றைம்பது மண்வெட்டிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு

நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டோர் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற

1 வார **துரித பயிற்சி வகுப்புகள்**

பாடநெறி: பொதுஅறிவு - பொதுஉளச்சார்பு

ஆரம்பம் 19 8 - 89

- ★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் (மு.ப 9-12வரை)
- ★ இலவச பாடக்குறிப்புகள்; வினா-விடைப்பயிற்சிகள்.
- ★ கட்டணம் ரூபா 150. 00 (முழுப்பயிற்சிக்கும்)

**ASTAN INSTITUTE**

101/10, Stanley Road, Jaffna.

(மக்கள் வங்கிக்கருகாமையில்) (C/3297)

உ

சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வானுறையுந் தெய்வத்துள் ஒருவராகிவிட்ட

புங்குடுதீவு

அமரர் திருமதி, வைரமுத்து நாகம்மா அவர்கள்

வையத்தில் தெய்வத் தாயாக வந்தது: 13 - 04 - 1916

தெய்வத் தாயாகச் சென்றது: 27 - 07 - 1988

எங்கள் தெய்வத்தாயே!

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையுந் தெய்வத்துள் ஒருவராக நீங்கள் மாறிவிட்ட இந்த முதலாவது ஆண்டு நிறைவுப் புனித நாளிலே எங்கள் ஒவ்வொருவரினதும் இதயக் கோவில்களிலே மூலமூர்த்தியாக நிறைந்துவிட்ட உங்கள் பாதாரவிந்தங்களிலே - எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்; ஓர் உத்தமத்தாய் - அவள் இலக்கணங்கள் எத்தகையவை என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தாங்கள் திகழ்ந்தீர்கள் என்பதை நாடறியும் -ஏடறியும்- நல்லவர்கள் யாவரும் அறிவார்கள் தாயே! எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக என்றென்றும் விளங்குமாறு கோரித் தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

'சித்திராலயா' புங்குடுதீவு. (1486)

மலிவு விலையில் அறிமுகம்!

**CHILTON TRIP SWITCH**

மின்பொறியியலில் புகழ் மிக்க OTTERMILL CHILTON LTD ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

## சுந்தர்சன்

சந்தை முன், மானிப்பாய். (C/3121)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

### க. பொ. த. (சா. த.) 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு

க. பொ. த. (சா. த.) 1989 டிசம்பர் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்வரும் வியாழக்கிழமை (17 - 08 - 1989) தவறாது கல்லூரியில் சமுகம் தரவும்.

அதிபர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம்.
14 - 08 - 89 [சி-3293]

## அறிவித்தல்

சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்

### பாவித்த வாகனங்களின் ஏலவிற்பனை

இத் திணைக்களத்தினால் பாவிக்கப்பட்டு பழுதடைந்த கீழ்க்காணும் வாகனங்கள் எதிர்வரும் 24-08-89 காலை 10.00 மணியளவில், 304/3 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்திலுள்ள எமது மருந்துக் களஞ்சிய வளவினுள் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

(1) 33 ஸ்ரீ 5576 வோக்ஸ்வேகன் வான்
(2) 33 ஸ்ரீ 8288 " "
(3) 33 ஸ்ரீ 7519 " "


இவ் வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் மேலே குறிப்பிட்ட விலாசத்தில் அலுவலக நாட்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகிறேன்.

அதியுயர் கேள்விக்காரர் தனது கேள்வித் தொகையை உடனடியாக இவ் அலுவலகத்தில் செலுத்தி குறித்த வாகனத்தை அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை 59, விக்ரோறியா றோட், யாழ்ப்பாணத்திலுள்ள எனது அலுவலகத்தில் வேலை நாட்களில் அறிந்து கொள்ளலாம்.

ந. கனகசபை,
சு. சே பி. பணிப்பாளர்.
யாழ்ப்பாணம். [சி-3284]

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

திரு. செல்லையா கனகசபை அவர்கள்

மட்டுவில் தெற்கு

C. K. S. அம்பாள் அப்பளத் தொழிற்சாலை உரிமையாளர்

தோற்றம்: 24 — 06 — 1937

மறைவு: 15 — 08 — 1988

அன்பின் இருப்பிடமாய் ஆருயிர்த் தெய்வமாய் இன்பமே வடிவமாய் ஈகையினிருப்பிடமாய் உற்றாரும் ஊராரும் போற்ற வாழ்ந்து எல்லோர் உள்ளத்திலும் ஏகமாய் வீற்றிருக்கும் எங்கள் அருமைத் தியாக சொரூபியே! உங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆகின்றாலும் எங்கள் உள்ளத்தை விட்டகலாத தெய்வமே! உங்களுக்கு எங்கள் எல்லோருடைய ஆழ்ந்த கவலையோடு கூடிய கண்ணீர் அஞ்சலி!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்.

மனைவி, மக்கள், தாய், சகோதரர், மைத்துனர், மாமன், தொழிலாளர்கள்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. [1525]

மின்சாரம் இல்லாத வேளைகளிலும், எமது போட்டோ பிரதிசேவை, ஜெனரேட்டர் உதவியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது:

உங்கள் போட்டோ பிரதி தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்:

## சண்முகம் றேட்ஸ்,

இல. 65, (185) பிரதான வீதி. யாழ்ப்பாணம். (1483)

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் அழைப்பிதழும்

மலர்வு: 06- 03- 1934

உதிர்வு: 18- 07- 1989



திருமதி

**P. F. ராணி அந்தோனிப்பிள்ளை**

(ஆசிரியை யா/மாதகல் புனித தோமையார் வித்தியாலயம்)

இறந்தொழியேன் உயிர் வாழ்வேன்
ஆண்டவருடைய அருஞ் செயல்களைப் பறைசாற்றுவேன்
(117ம் சங்: 17 வசனம்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் ஊற்றாய், அறிவுச்சுடராய், பாசத்தின் உறைவிடமாய், சேவையின் சிகரமாய், தியாகத்தின் இருப்பிடமாய் வாழ்ந்தீர்: அன்பான புன்சிரிப்பாலும், கலகலப்பான பேச்சினாலும். எங்களனைவரது இதயங்களையும் கவர்ந்த அன்பின் ஊற்றே! எங்கு சென்றாய்?

போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தை தானும் சொன்னாயா? காலமெல்லாம் எமக்கு வழிகாட்டியாய் இருப்பாயென இருந்தோம்: எங்களை ஆறாத்துயரில்ஆழ்த்தி விட்டு சென்ற உம்மை எப்படி மறப்போம்?

அன்னாரின் இறந்த செய்தியைக் கேட்டு பல விதங்களிலும் எமக்கு ஆறுதலளித்த உறவினர், நண்பர்கள் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் மாணவர்கள் மரியாயின் சேனையார் மற்றும்யாவருக்கும் எமது நன்றிகள்;

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 17-8-89 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில்நடைபெறும் திருப்பலியிலும் உபசரணையிலும் பங்கு கொண்டு இவரின் ஆத்மசாந்திக்காக மன்றாடும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

பிரிவைத் தாங்காது துயருறும்!
—இவரின் குடும்பத்தினர்.

'இம்மனுவேல் லொட்ஜ்' மாதகல். (1524)

## 90 ஆவது நாள் நினைவஞ்சலி



### நடராசா - ஜெகரன் (இன்சூர்)

தாயின் மடியில்: 27 - 09 - 1971

மண்ணின் மடியில்: 17 - 05 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் ஊற்றாய், அறிவுச் சுடராய், பாசத்தின் உறைவிடமாய், எம்மிடையே கலகலத்துச் சிரித்த உன் பூமுகம் காணாது தவிக்கின்றோம் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு ஒருகணத்தில் இந்த மண்ணிற்கும் மக்களுக்கும் நலன் புரியப் புறப்பட்டாய்! அணைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வமே! இந்நாளில் அல்ல எந்நாளுமே உம்மை மறவோம்.

உம் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்;

உம் பிரிவால் வாடும்:

அப்பா, அம்மா, சகோதரர்கள், மாமாமார்கள். சித்தப்பாமார்கள், சித்திமார்கள், பெரியப்பாமார்கள். உற்றார். உறவினர்கள், நண்பர்கள்.

கோண்டாவில் வடக்கு. கோண்டாவில். (1526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்:

அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை.

பொருள்:

சான்றோர்க்கு நாணுடைமை அணிகலம் அன்றோ? அந்த அணிகலம் இல்லையானல், பெருமிதமாக நடக்கும் நடை ஒரு நோய் அன்றோ?


# உதயன்

இல. 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி 24800 23073

15 - 08 - 1989 த. பெ. இல. 24


## சிமெந்துத் தட்டுப்பாடு

வடக்கில் நீண்ட நாட்களாக நீர் மின்சார விநியோகம் இல்லை. அதனுல் காங்கேசன்துறையில் உள்ள இரண்டு சிமெந்துத் தொழிற்சாலைகளில் ஒன்றில் மட்டுமே உற்பத்தி நடைபெறுகிறது. ஜெனரேட்டர் மூலம் மிகக் குறைந்தளவு சிமெந்தே உற்பத்தி செய்யப்படுகிறது. அதனுல் சிமெந்து விநியோகம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வழக்கமாக நாளாந்தம் நூற்றுக்கணக்கான லொறிகளுக்கு விநியோகிக்கப்பட்ட சிமெந்து, இப்போது இருபத்தைந்து லொறிகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. மொத்தத்தில் இப்போது உற்பத்தியாகி, விநியோகிக்கப்படும் சிமெந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் தேவைகளுக்கே போதுமானதல்ல.

சிமெந்தின் சந்தை நிலைமை இவ்வாறு இருக்கும் வேளை, விநியோகிக்கப்படும் சுமார் ஐயாயிரம் சிமெந்து பைக்கட்டுகளில் பெரும் எண்ணிக்கை நாளாந்தம் தெற்கே, குறிப்பாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

காலியிலும், புத்தளத்திலும் இரண்டு சிமெந்து தொழிற்சாலைகள் இருந்தபோதிலும், நாட்டின் சிமெந்துத் தேவையில் பெரும் பகுதியைப் பூர்த்தி செய்பவை காங்கேசன்துறைத் தொழிற்சாலைகள் இரண்டுமே. அதனுல் உற்பத்தி வீழ்ச்சி கண்ட காலத்தில், அதிக விலைக்கு விற்பதற்காக வர்த்தகர்கள் சிமெந்தை தெற்கே கொண்டு செல்கிறார்கள். அதுவே உள் உண்மை.

சிமெந்து உற்பத்தியாகும் பகுதியிலேயே தட்டுப்பாடும், விலையேற்றமும், பலர் வேலை இழக்கும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளன.

சந்தையில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு உண்டாகி உள்ளது. அதனுல் விலை கிடுகிடு என்று உயர்ந்து விட்டது. கட்டட வேலைகள் பலவும் ஸ்தம்பித்துவிட்டன. அதன் விளைவு கட்டடத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பலவித தொழிலாளரும் வேலை இழந்து கஷ்டப்படுகின்றனர். மின்சாரத் தடையால் தொழில் இழந்து நாதியற்று இருக்கும் பல்லாயிரக் கணக்கான ஏனைய துறை சார்ந்த தொழிலாளர்களுடன் இவர்களும் சேர்க்கப்பட்டு விட்டார்கள்!

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல, வடக்கின் பொருளாதாரமும், வேலைவாய்ப்புத் துறையும் இவ்வாறு பல வழிகளாலும் நலிவுற்று வருகின்றன. ஆனல் அவற்றை நிவர்த்தி செய்யவோ, நிமிர்த்தி எடுக்கவோ எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இல்லை!

இங்கே உற்பத்தி செய்யப்படும் சிமெந்து விடயத்தில் கூட, கொழும்புக்குத் தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. உற்பத்தி வீழ்ச்சி கண்ட காலத்தில் அதனை உள்ளூரிலேயே விநியோகித்து, அதனை நம்பி வீட்டில் அடுப்பு மூட்டும் ஆயிரக்கணக்கான இந்தப் பிரதேசத் தொழிலாளர்களின் வயிற்றுக்குச் சாப்பாடு போட வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க எவருமில்லை. சம்பந்தப்பட்ட பகுதிக்கு முன்னுரிமை என்ற நிலைப்பாடும் மறந்து போயிற்று!

அக்கறை இல்லாத அதிகாரிகளும், லாபம் ஈட்ட முனையும் வர்த்தகர்களும் உள்ளூர் தொழிலாளரின் நிலையை நினைத்துப் பார்த்திருந்தால், அன்றாடம் காய்ச்சிகளான ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெற்று வயிறுடன் தவிக்கும் நிலையைத் தவிர்த்திருக்கலாம்.

தாய் பசித்திருக்கத் தானம் செய்யும் மகன்போல, எமது சொந்தப் பகுதி மக்களைப் பாதிப்புற வைத்து விட்டு, இங்கு உற்பத்தியான சிமெந்தை தெற்கே எடுத்துச் செல்லும் நிலை உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும்.

உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் மனிதனின் மிகப் பிரதானமான அடிப்படைத் தேவைகள். உறையுள் உருவாக்க இப்போது சிமெந்து இன்றியமையாத பொருளாகி விட்டது. ஆகவே அதனையும் அத்தியாவசியப் பண்டமாகக் கருதி, உற்பத்தி வீழ்ச்சி கண்டு பற்றுக்குறை நிலவும் போது, தற்காலிகமாக இறக்குமதி செய்வதைவிட வேறு மார்க்கமில்லை.

இலங்கையின் பொருளியல், உற்பத்திப் பின்னணியில் இறக்குமதியை விட மாற்று மார்க்கம் வேறு ஏது? சிமெந்து இறக்குமதி குறித்து ஆலோசிக்கப்படுவதாகக் கிடைத்திருக்கும் தகவல் நிச்சயமாக அதனையே எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

இலங்கை இறக்குமதி நாடாகவே இருக்கப் போகிறதா? அதனை மாற்றிக் கூறும் காலம் எப்போது வரும்?

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## மஞ்சத்தில் காணவந்தோம்

செந்தமிழின் தெய்வமே! செகத்தார் போற்றும்
சேயோனே! செயிர் தீர் வேலையுன்றன்
அந் தமிலாப் பெருமையினை அறிந்தோம் நாங்கள்
அகங்குளிர உருகியுளம் களித்தே நின்றோம்
பங்கமிலாப் பெருவாழ்வு பெறவே வேண்டி
பக்தியுடன் மஞ்சத்தில் காணவந்தோம்
தங்கு தடை எதுவுமின்றி அருள்தனை மேலும் மேலும்
தருகின்ற நல்லூர் எம் நாதா போற்றி!

— நீர்வையூர் பண்டிதர் முருகேசனுர்

(இன்று நல்லூர்க் கந்தன் மஞ்சத் திருவிழா)

## இரவு நேர மின்வெட்டு

அம்பாறை, ஆக. 15

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிக் கிராமங்கள், பட்டினப் பகுதிகளில் தற்பொழுது இரவு நேர மின்வெட்டு தினமும் அமுல் நடத்தப்பட்டு வருகின்றது.

தினமும் மாலை ஐந்து மணி முதல் இரவு பத்து மணி வரை இந்தமின்வெட்டு அமுல் நடத்தப்படுவதால் மின் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். (த - 14)

ஜனசக்தித் திட்டம்:

# யாழ. உதவி அரச அதிபர் பிரிவில் பரீட்சார்த்த நடைமுறை

யாழ்ப்பாணம், ஆக. 15

ஜனசக்தி திட்டத்துக்கான நிதி வசதி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனசக்தி திட்டம் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் துரிதகதியில் மேற்கொண்டுள்ளார்.

ஜனசக்தி திட்டத்துக்கான அனைத்து நடவடிக்கைகளும் கிராமசேவையாளர் பிரிவில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும்ஜனசக்தி அட்டை வழங்கும் நடவடிக்கைகள் ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் செப்ரம்பர் 10ஆம் திகதி வரை நடைபெறும்.

ஜனசக்தி அட்டை பெறத் தகுதியுடையவர்களுக்கு பொருட்கள் வழங்குவதற்கான தேவையான நிதி யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அட்டை பெற்றுக்கொண்டவர்கள் அக்டோபர் முதல் வாரம் முதல் பங்கீட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## பலாலியிலிருந்து பலர் இன்று விடுவிக்கப்படுவர்

பருத்தித்துறை. வல்வெட்டித்துறைப் பகுதிகளில் இந்திய அமைதிப்படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 50 பேர்இன்றுசெவ்வாய்க்கிழமை விடுவிக்கப்படுவர்.

அமைதிப்படையினர் வடபகுதிப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். என். பல்லா இவ்வாறு வாக்குறுதி அளித்தார்.

யாக்கரு அமைதிப்படை முகாமில் பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்கள் மத்தியில் பேசுகையிலேயே மேஜர் ஜெனரல் மேற்கண்ட வாக்குறுதியைக் கொடுத்தார்.

அமைதிப்படை வடக்கு — கிழக்கில் பதினைந்து நாள் யுத்த நிறுத்தம் செய்ய இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணக்கத்துக்குக் கொண்டு வந்து நிலைமை சுமுகமாக மாறினுல் யுத்த நிறுத்தம் நீடிக்கப்படலாம் - என்றும் மேஜர் ஜெனரல் பல்லா தெரிவித்தார்.

பொதுமக்களின் உயிர், உடமைகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பாசாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பலாலியில் உள்ள அமைதிப்படை உயர் அதிகாரிகளிடமும் யாக்கரு முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் யாதேவிடமும் தாம் பணித்துள்ளதாகவும் அவர் சொன்னுர்.

பருத்தித்துறை, வல்வைச் சம்பவங்களுக்குக் கவலை தெரிவித்த மேஜர் ஜெனரல் இனிமேல் அப்படி நிகழமல் பார்த்துக் கொள்ளப்படும் என்றும் பிரமுகர்களிடம் அவர் கூறினுர்.

இக்கூட்டத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகளும், மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர், (அ 70)

மட்டக்களப்புச் செயலகத்தில்

## 24 அதிகாரிகளுக்குப்பதிலாக 5 பேர் மட்டுமே சேவையில்

மட்டக்களப்பு ஆக. 15

மட்டக்களப்பு செயலகத்தில் 24 ஸ்ரீலங்கா நிர்வாக சேவை அதிகாரிகளுக்குப் பதிலாக 5 பேர்தான் கடமையாற்றுகிறுர்கள்.

ஏனைய பணிகளை எழுதுவினைஞர் சேவை அதி உயர் தர தகுதியுடைய 15 பேர் மேற்கொள்கிறுர்கள்:

மேலதிக அரச அதிபர் —1 (நிர்வாகம்) பிரதிசமூக சேவை பணிப்பாளர் பதவி — 3 மாதமாக காலியாகவுள்ளது:

அரச அதிபர், மேலதிக அரச அதிபர் — II, உதவி காணி ஆணையாளர், தலைமைப்பீட உதவி அரச அதிபர் உதவி உணவு கட்டுப்பாட்டுஅதிகாரி ஆகியோருடன் உதவி அரச அதிபரொருவரும் தான் ஸ்ரீலங்கா நிர்வாக சேவையை சார்ந்தவர்கள்.

10 உதவி அரச அதிபர்கள் நிர்வாக சேவையை சாராதவர்களாவர்.

தலைமைப்பீட உதவி அரச அதிபர்தான் உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பொதுசன தொடர்பு அதிகாரி, உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் பதவி என்பன வகிக்கிறுர். (க-21)

### சமய சிந்தனைகளில்

### ஐயனுர் கோவில் தேர்த் திருவிழா

அனலைதீவு, ஆக 15

பிரசித்தி பெற்ற அனலைதீவு ஐயனுர் கோவில் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். மாற்றியமைக்கப்பட்ட புதிய சித்திரத் தேரில் ஐயனுர் வீதி உலா வருவார்.

வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு விசேட கடல் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மீண்டும் அரச அலை அரசி படகுச் சேவையும் நடைபெறுகிறது. (க–18)

### மஞ்சம்

யாழ்ப்பாணம், ஆக 15

நல்லூர் கந்தசுவாமிதேவஸ்தான உற்சவத்தில் இன்று செவ்வாய்மாலை ஐந்து மணிக்கு மஞ்சத் திருவிழா நடைபெறும்.

மஞ்சம் காணவரும் பக்தர்களுக்கு வசதியாக விசேட போக்குவரத்து வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (த-3)

### குப்பிளான் விநாயகர்கோவில் தேர் தீர்த்தம்

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளை இடம்பெறும். (க)

இன்று காங்கேசன் வங்கியில்

## கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம்

காங்கேசன்துறை, ஆக. 15

கட்டுவன், குரும்பசிட்டி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கான 4 ஆயிரம் ரூபா நிவாரணம் இன்று செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளையில்வழங்கப்படும்.

குரும்பசிட்டி கிராம சேவகர் பிரிவில் மீளக்குடியமர்தல் நிவாரணமான ஆயிரம் ரூபாவைப் பெறுதவர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும்23 ஆம் திகதியும்—

கட்டுவன் கிராமசேவகர் பிரிவில்மீளக்குடியமர்தல்நிவாரணம் பெறுதவர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 24 ஆம் திகதியும் வழங்கப்படும்.

மேற்படி கொடுப்பனவுகளும் காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளையிலேயே வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த- 68)

### மயான கோலம்

கொடிகாமம், ஆக 15

கொடிகாமத்திலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மாலை 5 மணியானதும் மக்கள் நடமாட்டம் அடங்கி விடுகிறது. (க-75)

### பொன்விழா

பசிலைப்பள்ளி, ஆக. 15

முருங்கன் கிறிஸ்து அரசர் தேவாலயத்தின் ஐம்பதாவது ஆண்டு "பொன்விழா" கொண்டாட்டப்படவுள்ளது

அன்று காலை மன்னுர் மாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகள் தலைமையில் பாடற் திருப்பலிப் பூஜை நிறைவேற்றப்படும்.

மாலை பொன்விழா சிறப்பு மலர்வெளியீட்டு வைபவமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுமென முருங்கன் பங்குத் தந்தை அருட்திரு. ஜெயபாலன் குருஸ் அடிகள் தெரிவித்தார். (த-117)

## சுகாதார உதவியாளர் தமிழ்ப் பகுதிகளுக்கு நியமனம்

தமிழ்ப் பகுதிகளில் நிலவும் வெளிக்களச் சுகாதாரப் பணியாளர் பற்றுக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

அதன் பொருட்டு யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மாவட்டங்களில் சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

வட கிழக்கு மாகாண சபையின் சுகாதாரத் திணைக்களம் இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜீ. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். தாய்மொழி, கணிதம், சுகாதாரம் உட்பட ஒரு விஞ்ஞானப் பாடத்திலுமாக நான்கு திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும். ஜீ. சீ. ஈ உயர்தர வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களில் சித்தி அடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அலவன்ஸ் உட்பட 2000ரூபா வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தெல்லிப்பளை சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படும். பின்னர் இவர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் கடமைக்கு அமர்த்தப்படுவர். (அ-18)

## அத்தியாவசிய சேவைகளுக்கு மின் வழங்க முடியாத நிலைமை

### உயர் அதிகாரி கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஆக 15

பல அத்தியாவசிய சேவைகளுக்கு மின்சாரம் வழங்க முடியாது இருப்பது குறித்து இலங்கை மின்சாரசபையின் யாழ் பிராந்திய உயர் அதிகாரி ஒருவர் வருத்தம் தெரிவித்திருக்கின்ருர்.

வடக்கில் அஸ்பத்திரிகள், மருந்துக் களஞ்சியங்கள் உட்பட பல அத்தியாவசிய சேவைகளுக்கு மின்சாரம் கட்டாயமாக வழங்கப்படவேண்டிய சேவைகளுக்கு மின்சாரம் வழங்கமுடியாத நிலையில் இலங்கை மின்சாரசபை உள்ளது

கன்னுகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பெறப்படும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மின்சாரத்தை சில முக்கிய சேவைகளுக்கு மட்டுமே வழங்கக் கூடியதாக இருக்கிறது.

ஏனைய சேவைகளுக்கு மின்சாரத்தை வழங்க முடியாத நிலையில் இருப்பது குறித்து மின்சாரசபை வருத்தமடைகிறது.

எனினும்முக்கிய ஆஸ்பத்திரிகள் உட்பட ஏனைய அவசிய இடங்களுக்கு முடிந்தவரை மின்சார விநியோகத்தை வழங்க எமது சபை முயற்சியெடுத்து வருகின்றது. இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ)

### வாசகர் திருமுகம்

### வீதிகளின் நிலைமை

ஏற்கனவே, சிறு சிறு பள்ளங்களாக இருந்த பாரதி வீதி தற்போது குண்டும் குழியுமாக இருக்கின்றது. மழை வந்தால் குளமும் குட்டையும்போல்ஆகிவிடுகின்றது. மழை காலத்தில் இவ் வீதியால் செல்ல முடியாமல் உள்ளது.

அரியாலை வீதியில் இருந்து பூம்புகார் வரையுள்ள அரியாலை கிழக்கு வீதி இருகரையும் வயல்களைக் கொண்டது: வீதிக்கரை வரம்புகளை வீதியிலும் பார்க்கப் பதிவாகக் கட்டினுல் நீர் வழிந்து வயலையும் வீதியையும் சேதமாக்காமல் வடியும்.

ஏ. எஸ். பாஸ்கி
அரியாலை.

### காற்றுடி

தொண்டமனுறு வெளிக்களப் பயிற்சி நிலையத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் காற்றுடி கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. இது கடற்காற்றினுல் துருப்பிடித்து அதன் பாகங்கள் பல இடத்திலும் விழுந்த வண்ணம் இருக்கின்றன. இப்பாதையால் போகிறபொழுது ஒரு பயங்கரமான சூழ்நிலையே ஏற்படுகிறது. எந்தநேரம் எந்தப் பாகம் நமது தலைக்குமேல் விழுமோ என்ற பயம்.

வெகுவிரைவில் சந்நிதி முருகன் ஆலய உற்சவம் நடைபெற இருப்பதால் இவ்வழியால் போகும் அடியார்களுக்கு ஆபத்திருக்கிறது. இதை உடன் அகற்றுவதற்கு அதிகாரிகள் ஆவன நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

சி. சண்முகராசா
ஏழாலை:

### தண்ணீர் பற்றுக்குறை

கிளிநொச்சி 5ஆம் வாய்க்காலைச் சேர்ந்த நகரத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. அங்கு ஆஸ்பத்திரியில் நோயாளிகள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை: இந்த இடத்தில் பொதுமக்களும் குடியிருப்புத் திட்டத்தில் உள்ள மக்களும் தண்ணீர்ப் பற்றுக்குறையால் பெரும் கஷ்டப்படுகிறுர்கள்.

வயல்களிலும் குளங்களிலும் தண்ணீர் இல்லை.

அரசாங்க அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மகேந்திரன்
கிளிநொச்சி.

## கண்டதும் கேட்டதும்

எழுச்சியான போராட்டங்கள் சமூக உணர்வை வலுப்படுத்துகின்றன. குறுகிய நோக்குகளைக் களைந்தெறிகின்றன.

ஆனல் கடந்தகால அனுபவங்கள் மூலம் பாடம் படிக்காதவர்கள் இன்றும் எமது சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறுர்கள். இதற்கு ஓர் உதாரணம்:

சுகாதாரப் பகுதியுடன் சம்பந்தப்பட்ட பணிமனை ஒன்றுக்கு சமீபத்தில் இரு குளிர்சாதனப்பெட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன. ஒன்று மின்சாரத்தால் இயங்கும் குளிர்சாதனப்பெட்டி, மற்றது மின்சாரம் இல்லாத இன்றைய தேவைக்கு அத்தியாவசியமான மண்ணெண்ணெயால் இயங்கும் குளிர்சாதனப்பெட்டி.

பிரச்சினை இங்கேதான் உருவானது. குளிர்சாதனப் பெட்டிகள் வந்து இறங்கியபோது அவற்றின் பாதுகாப்புக்கு பிளைவுட் மரப்பலகைகள்போடப்பட்டிருந்தன அந்த மரப்பலகையை எடுப்பதற்கு அங்கு கடமையாற்றும் இரு ஊழியர்கள் மத்தியில் நான் முந்தி நீ முந்தி என்ற போட்டி நடை பெற்றது: சண்டையாகவும் அது உருவாக இருந்ததாம்.

புதிதாகக் கிடைத்த குளிர்சாதனப் பெட்டிகளில் மருந்து வகைகளை எவ்வாறு வைத்துப் பாதுகாக்கலாம் என்பதில் இருக்க வேண்டிய போட்டி பிளைவுட் பலகைகளை எடுப்பதில் ஏற்பட்டிருக்கிறது:

எங்கள் தமிழினம், எங்கள் தமிழினம், இன்றைய தமிழினம் இதுதானே?

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ மருதமடு மாதாவின் விண்ணேற்புவிழா சிறப்பிதழ் - 1989 ஆகஸ்ட் 15 ★


அன்னை அருளால் அகிலம் மகிழ வேண்டும்

★

அன்பர் அஜித்

★ அன்னை அருள் பாலிக்க வேண்டுகின்றோம் ★
★ Radio T. V - Video Deck Spare Parts
★ Trans Former Coilwinding
★ Video Filming

MINI TRADES CENTRE
J. M. C. Building
Stanley Road, JAFFNA.

மடுமாதாவின் திருநாளில் எல்லோரும் நலம் பெற வாழ்த்துகின்றோம்
★ மங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில்
★ தரமான தங்க நகைகளுக்கு
● நாட வேண்டிய ஸ்தாபனம் ●

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(பிறைவேற்) லிமிடெட்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மடுமாதாவின் அருள் கிடைக்க வாழ்த்துகின்றோம்!
அதி நவீன டிசைன்களில்
தரமான தங்க நகைகளுக்கு
★ நாட வேண்டிய இடம்: ★

செல்லையா சிவபாதலிங்கம்
218-H-கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மடுமாதாவின் திருநாளுக்கு எமது வாழ்த்துக்கள்!
★ தரமான மூக்கு கண்ணாடி வழங்குபவர்கள்
★ கண் வைத்திய நிபுணர்களின் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரிவர வழங்குபவர்கள்

எஸ். எம். பெர்னாண்டோ
கண்ணாடி கொடுப்பவர்கள்
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மடுமாதாவின் திருநாளுக்கு
எமது ஸ்தாபனத்தின் நல்வாழ்த்துகள்!
நம்பிக்கைக்கும் உத்தரவாதத்திற்கும்
ஒரே ஸ்தாபனம்:

Sujera Travels & Tours
No: 21, Vembadi Road, Jaffna.

★ மடுமாதாவின் திருநாள் வாழ்த்துக்கள் ★

S. P. Swamy
& Company (Pvt) Ltd.
Medical Division
Channelled Consultancy Medical-Clinical Laboratory Services E. C. G. Recordings-Pathological Examinations.
193, Power House Road, Jaffna.
Head Office: 30, Prince Street, Colombo-11.


## மக்களுக்கு மீட்பருளும் மடுமாதா

இலங்கையின் வடபகுதியில் சீர்மிகுந்து விளங்குவது மருதமடுத்திருப்பதி. அது மறையருள் ஒளிர்ந்து நிறை வளிக்கும் திருத்தலம். பக்தர்கள் திரள்திரளாக யாத்திரை செய்யும் புனித இடம். இத்திருப்பதியில் செபமாலை அன்னை சிறப்புடன் வீற்றிருக்கின்றார்.

ஆலயத்தில் அன்னையின் அலங்காரம் சொர்ணமயம்; அன்னையின் பக்தர்கள் செபமாலையைச் செபிக்கும் பக்திப் பரவசமூட்டும் காட்சி கண் கொள்ளாக்காட்சி. அன்னையின் திருவடிகளில் மலர் சூட்டி, தீபம்காட்டி, தூபம் காட்டிவிசுவாசிகள் ஒன்றித்து வணக்கம் புரிவார்கள்.

மக்களுக்கு மீட்பளிக்கும் செல்வாக்கு அனைத்தையும் இறைவன் மரியன்னைக்கு விரும்புற்றளிக்கின்றார். ஆதலால் கன்னிமரியாளை அருள் சொரியும் ஆனந்தகுமாரி என்றும் மரியாயியின் பக்தர்கள் செபமாலை அன்னையைப் பணிந்து வேண்டுகின்றனர். மருதமடுமாதா தமது பக்தர்கள், விசுவாசிகள் இரந்து வேண்டும் மன்றாட்டு, வணக்கம் இவைகளை ஏற்று அவர்களைத் தமது திருமகனிடமும் அவரது பலிக்கும் இறைத் தந்தையின் அன்புக்கும் இட்டுச் செல்கின்றாள். இதனால் "வானுலகின் ஏணி" "மூவுலகாள் இராணி" என மரியன்னை மகிமை பெறுகிறாள்.

**மாந்தை மாதா**

மன்னாரில் இருந்து ஏறத்தாழ ஏழுமைல் தூரத்தில் மாந்தைக் கிராமம் இருக்கின்றது. இக்கிராமத்திலும்மாதா கோயில் எழுப்பப்பட்டது. அதில் தேவதாயின் சுரூபம் வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது. மாந்தை மக்கள் தேவாலய 'மாந்தை மாதா' என்னும் மதிப்புப் பெயரிட்டுப் பூசித்து வந்தனர். இதை இற்றைக்கு 430 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கத்தோலிக்க புலவர் ஒருவரால் பாடப்பட்ட...'திருமாந்தை அம்மன்



—மருதமடு மரியன்னை—

பதிகம்'' என்னும் பழம் பாடல் குறிக்கின்றது.

**மாந்தை மாதாமடுமாதா ஆயினள்**

போத்துக்கேயர் ஆட்சியை அடுத்து ஒல்லாந்தர் எனப்படும் டச்சுக்காரர் இலங்கையை ஆண்டனர். ஒல்லாந்தர் கத்தோலிக்க மதத்தவர்களுக்கு முற்றும் முரணானவர்கள் இவர்கள் கத்தோலிக்க ஆலயங்களைத் தமது சமய ஆலயங்களாக இருப்பிடங்களாக மாற்றிக்கொண்டனர் 1669 ஆம் ஆண்டு மாந்தை மாதா ஆலயத்தை ஒல்லாந்தர் கூடுத் தலமாக எண்ணினர். இதையறிந்து பக்திமிக்க மாந்தை மக்கள் திருச்சுருபத்தை ஒளித்து வைத்திருந்தனர். திடவிசுவாசம் கொண்ட மாந்தை மக்களில் 20 குடும்பத்தினர் ஒன்றுகூடி ஊரைவிட்டுப் புறப்பட்டு ஒளித்து வைத்திருந்த சுருபத்துடன் காட்டுக்குச் சென்று சரந்துறைந்தனர். மாந்தையில் இருந்து காட்டு வழியே வந்த மாதா பக்தர்கள் தெய்வச் செயலால் மருதமடுவை அடைந்தனர். அங்கு அதில் மாதா சுருபத்தை வைத்துப் பூசித்து வந்தனர். அன்று தொட்டு மாந்தைத்தாய், மருதமடுத்தாய் எனப் போற்றப்பட்டாள்.

உலகில் வாழ் மக்கள் அனைவரும் சமாதானம், ஒற்றுமை ஆகிய பண்புகளுடன் ஒரே இறைகுல மக்களாய் இணைந்து இறைவனது மாட்சிமைக்காய் மகிழ்வுடன் கூடும் காலம்வரை மருதமடுச் செபமாலை அன்னை தொடர்ந்து பேச பக்தர்கள் விசுவாசிகள் அனைவரும் தமது விண்ணப்பங்களை, தேவ அன்னையை நோக்கி அவ் அன்னையின் தாமரைத் திருவடிகளில் சேர்த்தால், அனைத்துலகும் ஒரே இறைமக்கள் குலமாக விளங்கி இரட்சணியம் அடைய வழி ஏற்படும்.

- ஒரு விசுவாசி

### மாமரியே'

★★★★

உலைச் சூழும் பக்தர் படை
தலைச் சூழ்ந்த துன்பம் விடை
தனைப் பெற்றுச் சென்றிடாதோ?
தனை விங்கு நீங்கி டாதோ?
சுனை சுரக்கும் நீரினைப் போல்
அருள் அளிக்கும் மாமரியே!
நினை நினைக்கும் நெஞ்ச மெல்லாம்
நிறை வோடு வாழ்ந்திடச் செய்

— அ. நிக்ஸன்


தரமான கலர்ப்படப் பிரதிகள்
அதிகுறைந்த கட்டணத்தில்...
மிகக்குறுகிய காலத்தில்...
கலர்ப்படச் சுருள்
கழுவுதல், முற்றிலும் இலவசம்
நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில்
பிரதி செய்து 3 முதல் 5 நாட்களில்
விநியோகம்.
ஷப்ரு 207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மடுமாதாவின் அருட்கடாட்சம் தமிழ் மக்களுக்கு கிட்ட எமது வாழ்த்துக்கள்!
நாடளாவிய போக்கு வரத்து சேவைக்கு
(பொதிகள் மற்றும் சாமான்களை வேண்டிய இடத்துக்கு எடுத்துச் செல்பவர்கள்)
மடுக்குமாரி ரான்ஸ்போட்
Stanley FurnishingPalace
587, Stanley Road, Jaffna.

அருள் மாதாவை சமாதானத்துக்கும் சுபீட்சத்துக்கும் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்:
★ சகலவிதமான பால்மா வகைகள்
★ L. P. காஸ் ★ நவதானிய வகைகள்
இவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

CITY AGENCY
No. 158, Stanley Road, Jaffna.

ஆண்டாண்டு ஆவணி மாதங்களில்
நீண்ட இரு இனமக்களின் சங்கமம்
மீண்டும் இவ்வருடம் மடுத்திருப்பதி
தோன்ற யாசிக்கிறோம்!

★ றேடியோமனுவல் ★
ரி. வி., றேடியோ, ரேப்றெக்கோடர்,
பழுதுபார்ப்பவரும், உதிரிப்பாக விற்பனையாளரும்
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாதா பரலோகத்திற்கு எழுந்தருளும்
விண்ணேற்பு வைபவம்
மடுத்திருப்பதியில் சிறப்புறுவதாக!

★ P. I. பர்னாண்டோ ★
பல்கட்டுபவர், கண்ணாடி கொடுப்பவர்
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.
கிளை: 292 (540) ஆஸ்பத்திரி வீதி,
(யாழ் பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

நாட்டில் அமைதி தோன்றி சுபீட்சம் மலர்ந்து
சமாதானம் நிலவ மடு அன்னையை மன்றாடுகின்றோம்!
★ ரி. வி. ★ றேடியோ, ★ சுவர் மணிக்கூடு
★ சூட்கேஸ் அன்பளிப்புப் பொருள்கள்
விற்பனையாளர்

மரியநாயகம் ஸ்ரோர்ஸ்
55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மடுமாதா விண்ணேற்பு திருநாள்
படுவினைகள் அகலப் பெருக்கெடுத்து வருக!
★ மளிகைப் பொருள்கள் ★ குளிர்பான வகைகள்
★ கோழித்தீனுக்கு

★ ராஜா ஸ்ரோர்ஸ் ★
நவீன சந்தை, பண்டத்தரிப்பு.

மடுப்பதியில் மகிமையுறும் மரியன்னை
அடியவர்க்கு அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றோம்!
அந்தியகால சேவைக்கு நம்பகமான நண்பன்!

★ பிறைற் ஹவுஸ் ★
(புனித யாகப்பர் ஆலய மருங்கு)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மடு பெருநாளில் மடுமாதா அருள்பாலிப்பாளாக!
சகல விதமான மருந்து வகைகளுக்கும்
நாட வேண்டிய இடம்

★ CITY MEDICALS ★
487, Hospital Road, JAFFNA.


### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 15

"சமூக சுகாதாரத்தில் சுகாதாரப் பரிசோதகர்களின் பங்கு" என்பது பற்றிய கருத்தரங்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெறும்.

நாளை புதன்கிழமை நடைபெறும் இக்கருத்தரங்குக்கு யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ந. கனக சபை தலைமை வகிப்பார்.

யாழ் பிராந்திய தொற்று நோயியலாளர் டாக்டர் சா. விஜயராசா, தாய்சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பொன்னம்பலம், சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரக் கல்விப் போதனாசிரியர் திரு. கா. வைத்தீஸ்வரன் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் இதில் பங்கு பற்றுவார்கள்(த-18)

### போக்குவரத்து

பச்சிலைப்பள்ளி, ஆக. 15

மீசாலை புத்தூர் சந்தி முகாமுக்கு முன்னுல் உள்ள பிரதான வீதி ஒன்று விட்டு ஒரு நாள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுகிறது.

புத்தூர் சந்தி, சாவகச்சேரி ஆகிய முகாமுக்கு முன் உள்ள பிரதான வீதி தடை செய்யப்படும் போது ஒழுங்கைகள் ஊடாகப் போக்குவரத்து நடைபெறுகிறது. (3-117)

## இந்துசமய கருத்தரங்கு கொழும்பில் இருநாட்கள்

கொழும்பு, ஆக 15

இந்து மதம் பற்றிய இரு நாள் கருத்தரங்கு ஒன்றை இந்து சமய, இந்துகலாசார அலுவல்கள் திணைக்களமும் இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து நடத்த ஏற்பாடு செய்து வருகின்றன.

கருத்தரங்கின் தலைப்பு: "சமுதாயப் பணிகளில் இந்து சமயக் கண்ணோட்டம்"

வருகிற 19, 20 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடகம் மாலை 4 மணி வரை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

19 ஆம் திகதி காலை இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் துணை அமைச்சர் பி. பி. தேவராஜ் கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

கொழும்பு மாநகரில் உள்ள சைவ ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் கருத்தரங்கில் கலந்து கொள்வர்.

இந்து சமயமும் சமூகப் பணியும், இந்து சமயப் பண்டிகைகள் கிரியைகள் என்பனவற்றின் முக்கியத்துவம், சமூக ஒழுக்கநெறிகள் இந்துசமய தத்துவங்கள், சமயக் கோட்பாடுகள், சூழல் சுகாதாரம் கல்விப் பணியில் இந்து ஆலயங்கள் — நிறுவனங்களின் பங்களிப்பு ஆகிய தலைப்புக்களில் உரைகள் இடம்பெறும். (உ-எ)

### குறுகும் வீதிகள்

கோப்பாய், ஆக. 15

நீர்வேலிப்பகுதியில் சிறு வீதிகளினூடாக சாதாரண கார் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது:

இப் பகுதியில் வீதிக்கு அண்மையில் வசிப்பவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு வீடுமதில்களை கட்டி வருவதினால் வீதிகளின் அகலம் குறைந்துள்ளது. (க - 72)

## அமைதிப்படை விலகல் நடவடிக்கை தொடரும்

### கொழும்பில் ராஜதந்திரி தகவல்

கொழும்பு, ஆக 15

அமைதிப்படை தாயகம் திரும்பும் நடவடிக்கை இனித் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

கொழும்பில் சிரேஷ்ட ராஜதந்திரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி இந்தியா - இலங்கை அரசுகள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து அமைதிப்படை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய நெருக்கடி தணிந்தது தெரிந்ததே.

அதன் பின்னர் இந்திய அரசு மூன்று அணிகளாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அமைதிப்படையினரைத் திருப்பி அழைத்தது.

இதே மாதிரி அமைதிப் படையினர் அணி அணியாக தாயகம் திரும்பிக்கொண்டே இருப்பர் [illegible]

பாடசாலை அதிபர்கள்

## பொறுப்புள்ள அதிகாரிகளாக கடமை ஆற்ற வேண்டும்

யாழ்ப்பாணம் ஆக 15

பாடசாலை அதிபர்கள் முதன் நிலை முகாமையாளர்களாக, பொறுப்புள்ள அதிகாரிகளாகச் செயல்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் யாழ் கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். தியாகராசா.

சாவகச்சேரி கோட்டத்துக்கு உட்பட்ட அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 'பாடசாலைகளில் கற்பித்தல் கற்றல் ஆகியன ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதையிட்டு அதிபர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் பாடசாலையின் வளர்ச்சி அப் பாடசாலை அதிபரின் கையிலேயே தங்கியுள்ளது'' என்பதை அதிபர்கள் மறக்கக் கூடாது என்று கூறினார்.

கல்வி அதிகாரிகள் இ. சிவானந்தன், சி. வே. மகேசவேலு, த. துரைசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்கள். (இ-3)

### விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 15

யாழ் - ஐக்கிய சினிமா ஊழியர் சங்கத்தின் விசேஷ கூட்டம் வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை 16 ஆம் திகதி நடைபெறும்.

திரு. க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பல ஆராயப்பட இருக்கின்றன. (த - 3)

### கொத்தணி அதிபர்

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு. கே. கே. நடராசன் ஓய்வு பெற்றதால் உப அதிபராகக் கடமையாற்றியவரும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபருமான திரு. ஆ. இராசநாயகம் கொத்தணி அதிபரின் கடமைகளை கவனித்து வருகிறார்.

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் புதிய அதிபராக காரைநகர் யாழ்ரன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றும் திரு. செ. பத்மநாதன் பொறுப்பேற்றுள்ளார். (க-28)

### சவூதியில் நியமனம்

அம்பாறை, ஆக 15

கிழக்கிலங்கையில் பல்கலைக்கழகத்தில் பதிவாளராகக் கடமையாற்றியவரும், கல்வி மானுமான ஜனாப் எஸ் எச் எம் ஜெமீல் சவூதிஅரேபியாவின் தலைநகரான ரியாத்திலுள்ள சர்வதேசக் கல்லூரி ஒன்றின் அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

கல்வித்துறையில் அதிபர், ஆசிரிய கலாசாலை அதிபர், கல்வி அதிகாரி, டரீட்சைத் திணைக்கள உதவி ஆணையாளர், பல்கலைக்கழகப் பதிவாளர், தொழிற்சங்கத் தலைவர் எனப் பரந்த அனுபவமுடைய ஜனாப் ஜெமீல் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாகக் கல்வித்துறையிலும் நிர்வாகத் துறையிலும் கடமையாற்றியுள்ளார். (த-14)

### கோவிலில் திருட்டு

கோப்பாய், ஆக 13

கோப்பாய் வடக்கு பலாலை கண்ணகையம்மன் கோவிலில் அண்மையில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

விக்கிரகங்கள் யாவும் புரட்டப்பட்டு அதன் அடியிலுள்ள இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது. (க-72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்களாதேஷ் அகதிகள்

டாக்கா, ஆக. 14

பங்களாதேஷில் இருந்து மீண்டும் அகதிகள் மேற்கு வங்காளத்திற்கு செல்வதாக அறிவிக்கப்படுகிறது.

1971 பங்களாதேஷ் யுத்தம் முடிந்த பின்னர்தான் பங்களாதேஷ் எல்லைப்புறப் பகுதியைச் சேர்ந்தவர்கள் புதிதாக மேற்கு வங்காளம் சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும். (எ)

## காலக்கெடு நீடிப்பு

ஹைதராபாத், ஆக. 14

நக்ஸலைட் தீவிரவாதிகள் சரணடைய ஆந்திர மாநில அரசு வருகிற மாதம் 12 ஆம் திகதி வரை காலக்கெடுவை நீடித்துள்ளது.

மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் இதனை நேற்று அறிவித்தார். (எ)

# சோவியத் ராணுவ ரகசியங்களை வேவு பார்க்கும் அமெரிக்காவின் உளவுச் செயற்கைக் கோள்!

கலிபோர்னியோ, ஆக 14

உளவு பார்க்கும் செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக ஏவிய பின்னர் அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் ஐந்து விண்வெளி வீரர்களுடன் நேற்று வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியது.



புஷ்

குறிக்கப்பட்ட நேரத்தில், சரியாக கொலம்பியா விண்கலம் பத்திரமாகத் திரும்பியதாக நாஸா ஸ்தாபனம் அறிவித்தது.

### டெலிவிஷனில் பார்த்த மக்கள்

விண்கலம் வந்திறங்குவதை பார்க்க முன்னர் மக்கள் லட்சக் கணக்கில் தளத்தில் குழுமியிருக்க அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் 'கொலம்பியா' வந்திறங்குவதைப் பார்க்க மக்கள் அனுமதிக்கப்படவில்லை. வீடுகளில் இருந்தபடியே மக்கள் டெலிவிஷன் மூலம் அக்காட்சியைப் பார்த்தனர்.



கோர்பைச்சேவ்

கொலம்பியா விண்கலம் விண்ணில் பறக்கவிட்ட 'உளவுச் செற்கைக் கோள்' அமெரிக்க நட்சத்திரப்போர்த் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முதற்படியான நடவடிக்கை என்று அறிவிக்கப்படுகிறது.

சோவியத் யூனியன் மற்றும் நாடுகளில் உள்ள இராணுவ கேந்திர நிலையங்கள் முதலியவற்றை இந்த உளவுச்செயற்கைக் கோள் அடிக்கடி படம் பிடித்து அமெரிக்காவிற்கு வழங்கி வரும்.

'கொலம்பியா' கலத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் பத்திரிகையாளரைச் சந்திக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. விண்ணில் வலம் வரும்போது, நாஸா தளத்தில் உள்ள விஞ்ஞானிகளுடன் உரையாடுவது கூட ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கேட்கமுடியாதபடி தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### 20 லட்சம் மைல் பயணம்

20 லட்சம் மைல்களை விண்ணில் வலம் வந்த 'கொலம்பியா' விண்ணுக்கு அனுப்பப்பட்டதும் வந்திறங்கியதும் அமெரிக்க அதிகாரிகளால் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

### சலஞ்சர்

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் ஏழு விண்வெளி வீரருடன் அனுப்பப்பட்ட சில நிமிடங்களில் சலஞ்சர்' விண்கப்பல் நடுவானில வெடித்துச் சிதறியது; விண்வெளி வீரரும் இறந்தனர்.

அதன் பின்னர் விண்கப்பலில் 260 மாற்றங்களுடன் கொலம்பியா தயாரிக்கப்பட்டது. (எ)

## பலூன் விபத்தில் 13 பேர் மரணம்

சிட்னி, ஆக. 14

பலூனில் பயணம் செய்த ஒரு கோஷ்டியை சேர்ந்தவர்களில் 13 பேர் விபத்துக் காரணமாக உயிரிழந்த சம்பவம் ஆஸ்திரேலியாவின் மத்திய பகுதியில் இடம்பெற்றது.

நடுவானில் பலூன் வெடித்துச் சிதறியபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டது. (எ)

## தடை உத்தரவு

மாஸ்கோ, ஆக. 14

சோவியத் யூனியனில் உள்ள எஸ்தோனிய மாநிலத்தில் தொழிற்சங்க வேலை நிறுத்தங்கள் நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. (எ)

## ஜப்பான் சாதனை!

டோக்கியோ, ஆக. 14

ஜெட்போர் விமானத்துக்கு தேவையான என்ஜினைத் தயாரிப்பதில் ஜப்பான் வெற்றி கண்டிருப்பதாக டோக்கியோ அரசு அறிவித்தது. (எ)

## வேண்டுகோள்

பொன். ஆக 14

மேற்கு ஜேர்மனிக்குச் செல்ல வேண்டாம் என்று கிழக்கு ஜேர்மனி அரசு தனது பிரஜைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளத. (எ)

## உயிர்ப்பலி இன்றி பயிர்களை காக்க மின்னணு வேலி

எலிகள், ஆடுகள், மாடுகள் முதலான பிராணிகளிடமிருந்து வயல்களிலும் தோட்டங்களிலும் பயிர்களைப் பாதுகாக்க இப்பொழுது 'மின்னணு வேலி (Electronic Fencing) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே ஆங்காங்கே தூண்கள் நட்டு முள்வேலி இட்டு, அதை அவ்வப்போது பராமரித்து, அது தவிர காவலுக்கு ஆட்களையும் ஏற்பாடு செய்யும் அல்லல்கள் இனி இல்லை.

சமயங்களில் முள்வேலியில் மின்சாரத்தைப்பாய்ச்சி அதனால் உயிர்ப்பலிக்குக் காரணமாகி, மன உளைச்சலுடன், கோர்ட், வழக்கு என்று அலைக்கழிக்கப்படும் ஆபத்தும் இல்லை.

மொத்தம் ஆறு தூண்கள் — வயல் பரப்பளவுக்குத் தேவையான மின்கம்பி (Wire). ஒரு 12 வோல்ட் தொட்டி மின்கலம், இவை போதும் மின்னணு வேலி அமைக்க.

அதன் மூலம் மின்கம்பியில் குறைந்த சக்தி மின்சாரம் பாயும் அது வேலியைத் தாண்டும் பிராணிகளைக் கொல்லும் அளவுக்கு வன்மையானதல்ல. 'சுரீர்' என்ற நொடிப்பொழுதுத் தாக்குதல்; அவ்வளவுதான், பிராணிகள் ஓடிப்போய் விடும்; மின்கலச் செலவு சுமார் ரூ. 4,000 மின்கலம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை உழைக்கும். அதை மீண்டும் 'சார்ஜ்' செய்து கொள்ளலாம்.

மின்னணு வேலி மிகவும் சிக்கனமானது. பராமரிக்க எளிதானது; முள்வேலி அமைக்கும் செலவில் பத்தில் ஒரு பங்கு போதுமானது.

ஒரு மதிப்பீட்டின்படி 10 ஹெக்டேர் பரப்பளவுக்கு முள்வேலியிட ரூபா 135,000 செலவாகும். மின்னணு வேலிச் செலவு ரூபா 15,000 மட்டுமே.

கர்நாடக மாநிலத்தின் ஷிமோகா மாவட்ட தீர்த்த ஹல்லி தாலுகாவைச் சேர்ந்த ஒரு துடிப்பான விவசாயி பெங்களூரில் உள்ள ஒரு மின்னணுவியல் நிறுவனத்தின் துணையுடன் மின்னணு' வேலியை உருவாக்கியுள்ளார்.

நூற்றுக்கு மேற்பட்ட கர்நாடக மாநில விவசாயிகள் தம் வயல்களிலும், தேயிலை, கோப்பி, ரப்பர் மற்றும் ஏலக்காய் தோட்டங்களிலும் 'மின்னணு வேலி' அமைத்துள்ளனர்.

விரைவில் இந்த முறை இந்தியாவின் வேறு மாநிலங்களிலும் அறிமுகப்படுத்தப்படலாம். (எ-4)

## மனித உரிமை வாதிகள் மீது கியூபாவில் வழக்கு

ஹவானா ஆக. 14

மூன்று முன்னணி மனித உரிமைவாதிகளை கியூபா அரசு கைது செய்தது.

இவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

போதைக் கடத்தல் விசாரணைபற்றி பொய்த்தகவல்கள் பரப்பியதாக மூன்றுபேர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

போதைக் கடத்தல் குற்றத்துக்காக சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று குற்றவாளிகளும் தண்டனை வழங்கப்படுவதற்கும் முன்னர் துன்புறுத்தப்பட்டனர் என்று இம் மூவரும் கூறியிருந்தனர்.

## 18 பேருக்கு மரணதண்டனை

பீகிங், ஆக. 14

கடந்த வாரத்தில் மட்டும் சீனாவில் 18 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பல குற்றச் செயல்களைப் புரிந்ததாக இவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (எ)

## வருகிற செப்டெம்பரில் வட-தென் கொரியப் பேச்சு

சோல் ஆக 14

வடகொரியாவுடனான பேச்சுக்கள் வருகிற மாதம் ஆரம்பமாகலாம் என்று தென்கொரியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையே நடந்து வந்தநேரடிப் பேச்சுக்களை தென்கொரிய அரசு கடந்த மாதம்தான் இடைநிறுத்தம் செய்தது. (எ)

## லெபனான் பணயக்கைதி குறித்து அமெ.-ஈரான் பேச்சு

நிக்கோஸியா, ஆக. 14

லெபனான் பணயக் கைதி விவகாரம் தொடர்பாக ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே மறைமுகப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகலாம் என்று தெஹ்ரான் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இப்பேச்சுக்கள் மூன்றாவது நாடு ஒன்றில் இடம்பெறக் கூடும்.

பாகிஸ்தான் அந்த நாடாக இருக்கலாம்என்றுதெரிகிறது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் மத்தியஸ்தம் செய்யலாம் என்று ராஜதந்திரிகள் தெரிவித்தனர். (எ)

## இன்று செவ்வாய்;

# இந்திய சுதந்திர தினம்; செங்கோட்டையில் வைபவம்!

புதுடில்லி ஆக 14

இந்தியாவின்சுதந்திரதினம் நாளை (15 8-1989) கொண்டாடப்படுகிறது.

பிரதமர் ராஜீவ்காந்தி புதுடில்லி செங்கோட்டையில் நடைபெறும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வார்.

அப்போது அவர் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்துவார்.

இதனிடையில் எதிர்க்கட்சிகளின் தட்டுப்பாட்டில் உள்ள மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் தூரதர்ஷன் மற்றும் வானொலிகளில் உரை நிகழ்த்த மறுத்து விட்டனர். [எ]

# ஆப்கன் பிரச்சினை பற்றி ஈரானில் பேச்சு நடத்த பாக். மந்திரி விரைவு!

பெஷாவார், ஆக 14

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் வருகிற 16 ஆம் திகதி ஈரான் செல்கிறார்.

ஆப்கனிஸ்தான் பிரச்சினை குறித்து ஈரான் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதே பாகிஸ்தான் அமைச்சர் விஜயத்தின் நோக்கமாகும்.

இதற்கு முன்னோடியாக பாகிஸ்தான் அமைச்சர் பெஷாவாரின் ஆப்கன் கெரில்லா அரசின் தலைவர் ஷிக்புதுல்லா முஜாஹிதியுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இப்பேச்சுக்கள் பற்றிய விவரங்களை இருதரப்பினரும் வெளியிடவில்லை.

ஆனால் நஜிபுல்லா அரசுக்கு எதிரான கெரில்லாக்களின் போருக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்று அமைச்சர் யாகுப்கான் தெரிவித்தார்.

கடந்த ஆறு வாரங்களில் பாகிஸ்தான் அமைச்சர் தெஹ்ரானில் ஆப்கன் பிரச்சினை குறித்து ஏற்கனவே மூன்று தடவைகள் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார். (எ)

## இனமோதலைத் தூண்டியது மாநில அரசு

புதுடில்லி. ஆக. 14

மத்திய அரசின் அதிகாரிகள் குழு ஒன்று அஸாம் மாநிலத்திற்கு நேற்றுச் சென்றது.

போடோ இன மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்ட மோதல்கள், உயிரிழப்புக்கள் ஆகியன குறித்து நேரில கண்டறிந்து அதுபற்றி மத்திய அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குபடி இ குழுவிற்கு பணிக்கப்பட்டுள்ளது.

ஐந்து தினங்களாக நடந்த இனமோதலில் 200 க்கு அதிகமான போடோ இன மக்கள் கொல்லப்பட்டனர் என்று மத்திய அரசு கூறுகிறது.

ஆனால் அஸாம் மாநில அரசு அதிகாரிகள், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறைவு என்றும் அக்கறை கொண்ட சிலர் அதனைப் பெரிது படுத்திக் கூறுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனிடையில் — பிரதமர் ராஜீவ் காந்தி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்யவேண்டும் என்று புதுடில்லிராஜ்ய சபையில்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

போடோ இனத்தவருக்கு எதிரான வன்செயல்களை அஸாம் மாநில அரசே தூண்டிவிட்டதாகவும் ராஜ்ய சபையில் குறை கூறப்பட்டது. (எ)


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

ஆசிரிய தெரிவுப் பரீட்சைக்கான வினா - விடை வகுப்புகள்

11 ஆம் பிரிவு

ஆரம்பம்: 16 - 08 - 1989

ஆசிரியர்கள்:

திரு. குணராசா, திரு. குமாரவேல்

[சி-3294]

வாகன உரிமையாளர்களுக்கு:

★ ஒரு நற்செய்தி!

புன்னாலைக்கட்டுவன் சேவிஸ்ரேசன்

மின்சாரம் இல்லாத போதும் ஜெனரேட்டர் மூலம் 40 நாட்களாக வேலை நடைபெறுகின்றது.

உரிமையாளர்

மு. வரதராசன்

(1527)

For Students & Parents of

**St. Patrick's College, Jaffna.**

Please note that special STUDY-PACKS will be available at the College Office every Monday from 21st August for the following classes:-

Yr. 13 & 12 - In Physics, Chemistry, Economics, Religion

Yr. 11 & 10 - in Maths, Science, Tamil Religion.

Note: 1. The Study - packs will also be distributed to Parents coming with their children's College Diary.

2. These facilities will be extended to other Classes and in other subjects later.

3. Yr. 5: To prepare students for the Yr. 5 scholarship Exam, special Classes will be conducted on week days, starting on Thursday-17th August 1989.

[C-3217] - Rector

## வெற்றுச் சாக்கு விற்பனை

வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

எமது சங்கத்தில் 8000 வெற்றுச் சாக்குகள் கேள்வி விண்ணப்ப மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. சங்கத் தலைமைப் பணிமனையில் ரூபா 5/- கட்டி, விண்ணப்பப் பத்திரத்தை பெற்று, மீளத்தக்க வைபபுப் பணமாக ரூபா 250/- கட்டி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 22 08-89 ஆம் திகதிக்குப் பிந்தாமல், "தலைவர் வலி கிழக்கு வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி" என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்வி விலை" என குறிப்பிடப்படல் வேண்டும்.

[சி/3298] —பொதுமுகாமையாளர்.

விற்பனையாகின்றது!

ஆசிரிய தேர்வுப் பரீட்சைக்குரிய வழிகாட்டி நூல்!!

ஆக்கம்:- க. குணராசா M. A.

பொது அறிவு

பொது உளச்சார்பு

விலை ரூ 60. 00

| | | |
|---|---|---|
| ஸ்ரீலங்கா புத்தகசாலை | — | யாழ்ப்பாணம் |
| பூபாலசிங்கம் புத்தகசாலை | — | யாழ்ப்பாணம் |
| மக்மில்லன் புத்தகசாலை | — | யாழ்ப்பாணம் |
| ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை | — | யாழ்ப்பாணம் |
| மண்டேலா புத்தகசாலை | — | யாழ்ப்பாணம் |
| தூர்க்கா ஸ்ரேசனேர்ஸ் | — | சுன்னாகம் |
| பரம்ஸ் பஸ் நிலையம் | — | சாவகச்சேரி |
| அருள்நாயகி பஸ் நிலையம் | — | கொடிகாமம் |
| பிகபொன் | — | கிளிநொச்சி |
| கவிதா ஸ்ரோர்ஸ் | — | வவுனியா |
| மயூரன் | — | திருகோணமலை |

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

[சி-3295]

புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புடமதனில் வார்த்திட்ட பொன்போன்ற யேசு
புனிதருடன் தவவாழ்வில் பொய்மறைகள் மாழ
திடமனதுடன் அன்னை, தந்தை விலத்தி
தெய்வீக வழிநின்ற யாகப்ப முனியே!

சென். அன்ரனீஸ்.

40, கடற்கரை வீதி.
குருநகர், யாழ்ப்பாணம்.

# உதயன்

15 08 1989 செவ்வாய்க்கிழமை

கடலலையின் கடுமையினுல் கலங்கவுள்ளம்
சர்த்தர் சொல் வார்த்தையினுல் சித்தமதுமாறி
விடலையொரு பருவமதில் வேதநெறி கூறி
வேதனைக்கும், சோதனைக்கும் ஆளாகிய தேவே

சென். அன்ரனீஸ்

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## செய்திச் சாரம்

### மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 15

திறந்த பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பித்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கள்) முதல் திறந்த பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [ஒ-3]

### மரத்துடன் சடலம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 15

பளை அரசர்கேணி சனசமூக நிலையத்திற்கு அருகில் 45 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் தென்னை மரத்துடன் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

இவர் பளை களுதாவளைப் பகுதியைச் சேர்ந்தவர் என அறியப்படுகிறது. [ஒ-117]

### பல்கலைக்கழக மாணவரும் சுட்டுக் கொலை

கொழும்பு ஆகஸ்ட் 15

கடந்த வெள்ளிக் கிழமை இரவு கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஏ. தர்மசேன இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

27 வயதான இவரின் சடலத்தை பிட்டிப்பொல மயானத்தில் இருந்து பொலீஸார் மீட்டனர். (ஒ-எ)

### இரு பிக்குகள் சூட்டுக்குப் பலி

கொழும்பு ஆகஸ்ட் 15

கடந்த சனிக்கிழமை இரவு வியாங்கொடையில இரண்டு பௌத்தபிக்குகளும் 12வயதுச் சிறுவனும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வானில் சென்ற பத்துப்பேர் கொண்ட கோஷ்டி ஒன்று ஸ்ரீ ஜினராஜ விகாரையின் முன்னால் வைத்து இவர்களைச் சுட்டுக் கொன்றது. (ஒ-எ)

### நகரில் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா கோவிலுக்குச் சமீபமாக நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியில் வசித்து வந்தவருமான துரைசாமி செந்தமிழ்ச்செல்வன் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-51)

### பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவர்களின் 2ஆம், 3ஆம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள் இன்று வெளிவரவிருக்கின்றன.

விஞ்ஞான பீட பரீட்சை முடிவுகள் நேற்று வெளிவந்தன. (ஒ-3)

### சில்லாலையில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஆக. 15

சில்லாலைப் பகுதி நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

பண்ணாகம்: பனிப்புலம் சாந்தை, மாதகல் நுணசைப் பகுதி, மேற்கு வடலியடைப்பு பகுதிகளிலும் தேடுதல் இடம் பெற்றது. (ஒ-51-120)

### திருமலை துறைமுகத்தில் வசதி இல்லையாம்

கொழும்பு, ஆகஸ்ட் 15

இந்தியக் கப்பல்களில் இலங்கைக்கு வந்த சரக்குகளை திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்கும் யோசனையை இலங்கைத் துறைமுக அதிகாரசபை நிராகரித்துவிட்டது.

கொள்கலன்களில் கொண்டு வரும் பொருள்களை இறக்கும் வசதி திருமலைத் துறைமுகத்தில் இல்லாமையே யோசனை ஏற்றுக்கொள்ளப்படாததற்கு காரணம் என்று அதிகாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

### வழக்கறிஞர் காலமானர்

கொழும்பு, ஆகஸ்ட் 15

ஜனாதிபதி வழக்கறிஞர் திரு. அ. மகேந்திரராஜா கடந்த சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. அருள்நந்தி திருமதி அருள்நந்தி ஆகியோரின் மூத்த புதல்வரான திரு. மகேந்திரராஜா லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி ஆவார்.

வழக்கறிஞரான பின்னர் இவர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் 1948 ஆம் ஆண்டு முடிக்குரிய வழக்கறிஞராகச் சேர்ந்தார். 1962 இல் ஒய்வு பெற்ற பின்னர் 1983 இல் ஜனாதிபதி வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். (ஒ-எ)

### இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 15

தெல்லிப்பளை அரசடியில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவா சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த துரைராஜா ரவிச்சந்திரன் என்பவர் ஆவார். (ஒ)

பஸ் நிலையம் முன்பாக

மின்சாரம் இல்லாத வேளையிலும்
ஜெனரேட்டர் உதவியுடன்

★ போட்டோஸ்ரட் ★

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள

சன்லைற் றைக்கிளீனர்ஸ்

யாழ்ப்பாணம்.

[C/3291]

## தொண்ணூறு சடலங்கள் கொழும்பு பிரேத அறையில்!

கொழும்பு, ஆக. 15

அடையாளம் காணப்படுவதற்காக 90 பேரின் சடலங்கள் கொழும்பு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்படாத நிலையில் குறைந்தது 30 பேரின் சடலங்கள் பொலீஸ் தலைமைக் காரியாலய உத்தரவின் பேரில் அடக்கம் செய்யப்பட்டன.

கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் இனந்தெரியாதவர்களால் கொல்லப்படுவோரின் சடலங்களே பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளன. (ஒ-எ)

### தெற்கில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ சவளக்கடவலில்யு. பி. ஆரியவத்த என்ற வைத்திய அதிகாரி ஆறுபேரைக் கொண்ட இனந்தெரியாத குழு ஒன்றினால் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ தர்ம விஜய ஆச்சிரமத்தில உள்ள பரஞ்சாகதேரர் நான்கு பேரைக் கொண்ட குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ களுத்துறை மாவட்டத்தில் உள்ள மத்துகம நகர சபைக் கட்டடம் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது.

★ குகை ஒன்றிற்குள் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள், குண்டுகள் தேசிய அடையாளக் கார்ட்டுக்கள் ஆகியன பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டன.

★ இரத்தினபுரி மாவட்டத்தில் இனந்தெரியாதவர்கள் பீரிஸ் சில்வா என்ற குடும்பத்தவரையும் அவரது மனைவி, மகன் ஆகியோரை வெட்டிக் கொன்றனர் இவர்களின் சடலங்கள் பின்னர் வீட்டுக்குள் வைத்து எரிக்கப்பட்டன.

### ஈ-ஜ. முன்னணி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

சந்திப்பின்போது வல்வெட்டித்துறையில் நடந்த கொடுமைகள் விபரிக்கப்பட்டன.

இவற்றினைப் பார்வையிட தங்களோடு வருமாறு கேட்கப்பட்டபோது அது அவசியம் என்பதால் எமது தரப்பில் அது மறுக்கப்பட்டது. புலிகள் மிரட்டியதாலேயேஇக் கொடுமைகளை நாம் வெளிப்படுத்திேனும் எனக் கூறுவது அபத்தமானது.

எமது இந்த மறுப்பினை இந்திய தொலைக்காட்சி ஒளிபரப்பும் என நம்புகிறோம்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### யாழ். பாடசாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டி சமூகமாகப் பாடசாலைகளை நடத்துவதுபற்றி ஆராய வேண்டும் எனவும் —

சகல கொத்தணி அதிபர்களும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தமது கொத்தணிக்குட்பட்ட சகல அதிபர்களையும் பாடசாலை அபிவிருத்திச் சபை நிர்வாக உறுப்பினர்களையும் அழைத்து மேற்படி விடயத்தை ஆராயவேண்டும் எனவும்—

மேற்படி கொத்தணி மட்டத்திலான சபை ஒவ்வொன்றும் பெற்றோரின் இரண்டு பிரதிநிதிகளைத் தெரிந்து 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்வித் திணைக்களத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள யாழ் மாவட்ட மட்டத்திலான பாடசாலை அபிவிருத்திச் சபை ஒன்றிய மாநாட்டுக்கு அனுப்பவேண்டும்எனவும்—

பிரதிக் கல்விப்பணிப்பாளர் சகல அதிபர்களையும் பணித்துள்ளார். (ஒ-6)

### மடுமாதா,...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தொடர்ந்து திருச்சொருப ஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவடையும்.

உற்சவகால ஒழுங்குகளை பரிபாலகர் வண - பி. ஜேசுராசா அடிகள் செய்துள்ளார். (ஒ-51)

### அமைச்சர்----

அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு நடவடிக்கையினரின் பணிபற்றி சில அமைச்சர்கள் திரிபுபடுத்தி அறிக்கைகள் வெளியிட்டனர் என்று கூறப்படுவதைத்தொடர்ந்தே அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவின் முடிவை அரச நாடாளுமன்றக் குழுவும் ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிய வருகிறது. (உ-எ)

## காமினி தனது கூற்றை வாபஸ் பெற வலியுறுத்து

கொழும்பு, ஆக. 15

இன்று சகல இடங்களிலும் பிரேதங்கள் தான் எரிந்து கொண்டிருக்கின்றது என்று கூறுயதை அமைச்சர் காமினி திஸநாயக்கா வாபஸ் வாங்க வேண்டும்

— இப்படி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அமைச்சர் விஜேரத்தின மேலும் சொன்னதாவது;

திரு. காமினி திஸநாயக்கா அப்படிச் சொன்னது தவறு. அவர் அதனை வாபஸ் வாங்க வேண்டும்.

எரிந்து கொண்டிருக்கும் பிரேதங்கள் எம்மவரினுடையவை.

வருங்காலத்தில் பாதுகாப்புப் படையினரைத் தாக்கி அமைச்சர்கள் தன்னிச்சையாகப் பேச அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இப்படியான அறிக்கைகள் இனிமேல் வெளியிடப்படின் கட்சி சரியான நடவடிக்கை எடுக்கும்.

தேசிய அரசு அமைக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

இன்றைய பிரச்சினைகள் எல்லாம் ஜெயவர்த்தன காலத்தில்தான்ஏற்பட்டவை.

தேசிய அரசு அமைக்க ஜே. ஆருக்கு வாய்ப்பு இருந்தது. அப்போது அதைச் செய்யாமல் இப்போது எமக்கு ஏன் கூறவேண்டும்?

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் வின்போது நம்மவர்கள் கொல்லப்பட்டது தேசிய அரசு நிறுவுவதற்காக அல்ல.

தேசிய அரசு தேவையான நேரத்தில் அமைக்கப்படாத காரணத்தால் தான் இன்றைய நிலை ஏற்பட்டது.

— இப்படி திரு. விஜேரத்தின சொன்னர். (உ-எ)

### விஞ்ஞானமாணி----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(B Sc.) தேறியுள்ளனர் அவர்களில் எவரும் முதலாம் தரத்தில் சித்தியடையவில்லை. இரண்டாம் தரம் மேற்பிரிவில் மூன்று பேர் மட்டுமே சித்தி பெற்றுள்ளனர்.

இவர்களில் ரி. ஜெயராமன் (சுட்டிலக்கம் எஸ். 3886) என்ற மாணவர் விஞ்ஞான மாணிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதற்காக, அவருக்கு, பி. கனகசபாபதி ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

செல்வி எஸ். வித்தியாபூரணி, பி. கிரிதரன் ஆகியோர் மேற்பிரிவில் சித்தியடைந்த ஏனைய இருவருமாவர். (அ-ரி-6)

## மரண அறிவித்தல்கள்

### திரு. முத்துத்தம்பி மாணிக்கவாசகர்

[இளைப்பாறிய பிரதம அரசாங்க லிகிதர்]

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. முத்துத்தம்பி மாணிக்கவாசகர் காலமானர்.

இவர் ரோசம்மா (ஆசை) வின் அன்புக் கணவரும், இராசரத்தினம் [ஓய்வுபெற்ற பிரதம திருமணப் பதிவாளர்], திருமதி இரத்தினம்மா சிவபாதசுந்தரம் [ஓய்வுபெற்ற இறைவரிப் பரிசோதகர்], திருமதி ராஜேஸ்வரி திருநாவுக்கரசு [தபாலதிபர். கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவறூபி, கலாறூபி, சிவறூபி, ஜெயறூபி (சுவிஸ்). மணிவண்ணன் (சுவிஸ்) சிராளன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனும், சுகந்தன் [ஸ்கைரோஸ் யாழ்ப்பாணம்], ஜேசுதாஸன் [சவூதி], பிறேமகுமார் [ஜேர்மனி], ஜெயக்குமார் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [15-08-89] செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பராய் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் இருந்து காலை 11 மணி அளவில் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

பழையதபாற் கந்தோர் ஒழுங்கை,
உரும்பராய்.

தகவல்:
திருமதி மாணிக்கவாசகர்

[1497]

### திரு. கந்தையா தங்கராசா

திரு. கந்தையா தங்கராசா [முன்னாள் உத்தியோகத்தர் K. K. S.] காலமானார். இவர் திரு. கந்தையா, காலம் சென்ற நாகம்மா அவர்களின் அன்பு மகனும், கமலாதேவி, தங்கராணி [தாதி], அற்புதராணி [ரோசா] ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆறுமுகத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 15-8 89 (செவ்வாய்க்கிழமை) பி. ப. 1-00 மணிக்கு தம்பாலை இந்து மயானத்தில் நடைபெறும்.

தம்பாலை,
சன்னதி வீதி.
அச்சுவேலி.

[1603]

தகவல்:
கந்தையா (தந்தை)

## மரண அறிவித்தல்கள்

### திரு. S. K. L. கொன்ஸ்ரன்ரைன்

திரு. S. K. L. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் அகால மரணமானர். அன்னர் காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், லூட்ஸ் மனோனின் அன்புக் கணவரும். லிண்டஸ், றஞ்சித், தர்சினி, ஆஞ்சலா, றொகான் (சம்பத்திரிசியார்கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு கிளமன்ரைன், இம்மானுவல், ஹில்லரி, செல்வி ஸ்டெலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற யோசப் திருச்செல்வம் தம்பதிகளின் மருமகனும், திருமதி ரோஸ் இயேசுதாசன், திருமதி றூபி செல்வரட்ணம், திரு. L. A. யோசப், திருமதி. றயினி கனகசபை ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னரின் பூதவுடல் 16 8. 89 புதன் கிழமை காலை 9 30 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தயவாக வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

27/2, குருசோவீதி,
யாழ்ப்பாணம்.

(1523)

### திரு ம. க. கணேசன்

காரைநகர் பெரியமணலைச் சேர்ந்த முன்னைநாள் நாவலப்பிட்டிய வர்த்தகர் ம. க. கணேசன் 13-8-89 ஞாயிறு காலமானர். அன்னர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், பராசக்தி, பரமலிங்கம், பழனிலிங்கம், செல்வலிங்கம், (வர்த்தகர்கள், யாழ்ப்பாணம்), சிவலிங்கம் விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், புஸ்பலிங்கம விவசாயபீடம் மட்டக்களப்பு பல்கலைக்கழகம், அருமலிங்கம், ஞானசோதிலிங்கம் (தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவஞானம் (வர்த்தகர், யாழ்ப்பாணம்) க ர்தவல்லி ஆகியோரின் அன்பு மாமனும், நாகறஞ்சிவ நாகறூபி, நாகநந்தினி, பிரதீபன் ஆகியோரின் அ ப்பேரனும் ஆவார் அவரது ஈமக்கிரியைகள் அ ரின் இல்லத்தில் 14-8-89 நடைபெற்று சாம்பலோ ட மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பரமலிங்கம்.

காரைநகர்,
கரைபூமி.

(1496)

### திரு. வி. கணபதிப்பிள்ளை

(Retired Officer, Bank of Ceylon)

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ். இலங்கை வங்கியில் இருந்து இளைப்பாறிய உத்தியோகத்தருமாகிய திரு. வி. கணபதிப்பிள்ளை ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

இவர் திலகவதியின் அன்புக் கணவரும், வனஜா (கனடா), ஜெயகாந் (ராஜன் Dubai). ஹரிகரன் (கனடா), ரகிதரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவகுமார் (கனடா), குமுதினி (Dubai) ஆகியோரின் மாமனும், தனுஷா, சோபிதா ஆகியோரின் பேரனும், சின்னச்சிப்பிள்ளை (மீசாலை). இலட்சுமிப்பிள்ளை (கொடிகாமம்) ஆகியோரின் சகோதரரும், சிவப்பிரகாசம் (மீசாலை), காலஞ்சென்ற ஆறுமுகம் (கொடிகாமம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி கணபதிப்பிள்ளை

கொக்குவில் ரோட்,
திருநெல்வேலி வடக்கு.
திருநெல்வேலி.

(சி/3218)

### கிறிஸ்ததாஸ் கதிரேசு சிவகுரு

(M.L.T., சம்பந்தன் வைத்திய நிலையம்)

திரு. கிறிஸ்ததாஸ் கதிரேசு சிவகுரு (M. L. T., சம்பந்தன் வைத்திய நிலையம்) 14-08-1989 அன்று ஆண்டவரின் சமூகம் அடைந்தார்.

இவர் யோகமலரின் அன்புக் கணவரும், உஷா (France), லதா (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சுரேஷ் (ஆசிரியர், நவீல்ட் பாடசாலை, கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜரட்ணம் (France), மகேந்திரன் (திருகோணமலை இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அவரது நல்லடக்க ஆராதனை 15-08-1989 இன்று மாலை 3-00 மணிக்கு சுன்னாகம் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

'மலரகம்',
சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(1498)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15 - 08 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org